**O.S.No.3/2015**

**Date : 25.03.2021.**

*பிவாசா. 3 -* *திருமதி. பரமேஸ்வரி*

***சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை -***

*எனது முதல் சாட்சியத்தில் நான் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் கடந்த 20 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். 1ஆம் பிரதிவாதி சிவராமனின் மகன் சூர்யாவை 3 வயது வரை நான்தான் வளர்த்து வந்தேன் என்றால் சரிதான். எனக்கு வாரிசு எதுவுமில்லை. உயில் எழுதி வைக்கப்போவதாக எனது தாயார் எப்பொழுது எங்களிடம் கூறினார் என்று சொன்னால், நாங்கள் எதார்த்தமாக தேனிக்கு வந்தபொழுது, 7.11.2011-ல் உயில் எழுதப்போவதாகக் கூறி அன்றைய தினமே உயிலையும் எழுதினார். அந்த உயிலை எழுதும்பொழுது நான் இருந்தேன். ஆனால் அவர் எழுதிவைத்த விபரம் எனக்கு அவர் கூறியதற்கு பின்னிட்டுதான் எனக்கு தெரியும். உயிலை பற்றி எனது தாயார் கூறும்பொழுது, 2ஆம் பிரதிவாதி ஞானேஸ்வரியும் அங்குதான் இருந்தார். அந்த உயிலில் ஞானேஸ்வரி சாட்சி கையொப்பம் எதுவும் போடவில்லை என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் அவரை சாட்சி கையொப்பம் போட அழைக்கவில்லை. உயிலை எழுதும்பொழுது எனது தாயார் நல்ல மனநிலையில் ஆரோக்கியமாகத்தான் இருந்தார். எனது தாயார் இருந்த வீட்டிலிருந்து பத்திர அலுவலகம் சிறிது தூரத்தில்தான் இருந்தது. எனது தாயார் எழுதிய உயிலை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். உயில் எழுதுவதற்கு பத்திர ஆவணம் வாங்கியது பற்றி எல்லாம் எனக்கு தெரியாது. நாங்கள் தேனிக்கு வந்த பின்புதான் எழுதுவதற்காக பத்திரத்தை வாங்கி வந்தார்கள். பத்திரத்தை வாங்கி வெளியிலேயே வைத்து உயிலை எழுதி வந்தார்கள். நாங்கள் யாரும் எழுதவில்லை. பத்திரத்தை எங்கு*

வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. எனது உடன்பிறந்த தனலெட்சுமி எந்த வருடம் இறந்தார் என்று சரியாகத் தெரியாது. ஆனால் எனது தாயார் இறப்பிற்கு 2 வருடங்களுக்கு முன்னர் இறந்தார். உயில் எழுதிய அன்று ரேவதி, யுவராஜ் அங்கு இல்லை. தனலெட்சுமி இறந்தபின்னர் அவரது குடும்பத்தாரோடு எங்களுக்கு பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். நான் எனது சகோதரர் சிவராமனிடம் பணம். சொத்து, நகை ஆகியவற்றை வாங்கிக்கொண்டதாலும், எனது சகோதரியின் மகனை நான் வளர்த்த பாசத்தினாலும், நான் வாதி குடும்பத்தோடு பேசாத காரணத்தினாலும் வழக்கில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

**Sd/- G.Vijaya,**

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.